**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

அ.வ.எண். 39/2018

2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 07-ஆம் நாள் செவ்வாய் கிழமை பிரதிவாதி **(பி.வா.சா.1)** தரப்பு சாட்சியின் சாட்சியம்.

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிகளின் படி வள்ளியூர் முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி திருமதி.A.அன்னலெட்சுமி,M.L., அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | குழந்தை வேல் | **சமயம்** | : | |
| **த/பெ** | : | சுப்பிரமணிய நாடார் | **வயது** | : | 77 |
| **கிராமம்** | : | | **தொழில்** | : | |
| **வட்டம்** | : | | | : | |

**பி.வா.சா. 1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதி சுயம்பு நாடார் மற்றும் நீங்கள் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நீங்கள் இருவரும் உறவினர்கள் என்றால் சரிதான். சுயம்பு நாடார் என்ன பரிகாரம் கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து எந்த கிராமத்தில் , எந்த புல எண்ணில் உள்ளது என்றால் பழவூர் கிராமத்தில் உள்ளது , புல எண் தெரியாது. வழக்கு சொத்து சுயம்பு நாடாரின் தாயார் பொன்னம்மை நாடாத்திக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2) பொன்னம்மை நாடாத்திக்கு மொத்தம் எத்தனை செண்டு பாத்தியம் என்றால் 6 ஏக்கர் 36 செண்டு பாத்தியம் ஆகும். பொன்னம்மை நாடாத்திக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 மகன்களும்,1மகளும் உண்டு. அவர்களின் பெயர்கள் என்ன என்றால் மூத்தவர் பண்டார நாடார், 2 வது கணபதி நாடார் மற்றும் வாதியாகிய சுயம்பு

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.07 18:17:02 +0530

நாடார் ஆகும். பொன்னம்மை நாடாத்தி காலம் சென்ற பின் நீங்கள் பொன்னம்மை நாடாத்திக்கு பாத்தியப்பட்ட சொத்தில் பிரிவின்றி 2ல் 3 பங்கை அவர்களது குமாரர்களான பண்டார நாடார், கணபதி நாடார் என்பவர்களிடமிருந்து கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் படி நீங்கள் எவ்வளவு செண்டு இடத்தினை கிரையம் பெற்றீர்கள் என்றால் பண்டார நாடாரிடம் இருந்து 62 செண்டு, கணபதி நாடாரிடமிருந்து 1 ஏக்கர் 12 செண்டும் கிரையம் பெற்றேன்.

3) பண்டார நாடாரின் மீதி சொத்து யார் கிரையம் பெற்றுள்ளார் என்றால் நான் கிரையம் பெற்றுள்ளேன். வழக்கு சொத்து உங்கள் ஊருக்கு வருகின்ற கிழமேல் ரோட்டிற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்து என்றால் சரிதான். வடக்கு பக்கமும் உள்ளது. வழக்கு சொத்திற்கு கிணறு மையப்பகுதியில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்டது என்று சாட்சி பதிலளிக்கிறார். தெற்கு பகுதியில் உள்ள சொத்து முழுவதும் தனக்கு பாத்தியப்பட்டது எனவும், வடக்கு பகுதியில் உள்ள சொத்தினை வாதிகள் எடுத்துக் கொள்வதாக கூறினார்கள். மொத்தமுள்ள 6 ஏக்கர் 36 செண்டில் வாதி சுயம்புக்கு எவ்வளவு செண்டு பாத்தியப்பட்டது என்றால் 62 செண்டு பாத்தியம் உள்ளதாக சாட்சி கூறுகிறார்.

4) நீங்கள் சுயம்புவிடம் இருந்து எவ்வளவு செண்டு கிரையம் பெற்றுள்ளீர்கள் என்றால் 27 செண்டு ஆகும். மேற்படி கிரைய ஆணவம் பாறசாலை சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் பி.வா.சா.ஆ. 7 பண்டார நாடார் மற்றும் கணபதி நாடார் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். எனக்கு படிக்க தெரியாது. வாதியின் தாயார் பொன்னம்னை நாடாத்திக்கு புல எண். 496 ஏக்கர் 6 செண்டு 36 ல் ரோட்டிற்கு தென்புறம் ஏக்கர் 2 செண்டு 37 ல், வடபுறம் தென்புறமாக ஏக்கர் 1 செண்டு 87 பாத்தியப்பட்டது என்றால் நான் 2 ஏக்கர் 37 செண்டு வாங்கியதாக சாட்சி பதிலளிக்கிறார்.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.07 18:17:07 +0530

5) பி.வா.சா.ஆ. 7 ஆவணத்தில் புல எண்.496 ல் ஏக்கர் 2.37 ல் ரோட்டிற்கு தென்புறமாகவும் , வடபுறமாகவும் இருக்கும் ஏக்கர் 1.87 ல் பிரிவின்றி பங்கு 3 ல் பிரிவின்றி எங்கள் சகோதரர் சுயம்பு நாடார் பாகம் பிரிவின்றி செண்டு 62 1/3 நீக்கி எங்கள் இருவர் பாகம் ஏக்கர் 1 செண்டு 24 2/3 பூராவும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுயம்பு நாடாரின் இருந்து கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ. 8 ஆவணத்தில் வழக்கு சொத்து விவரத்தில் சர்வே எண். 496 ஏக்கர் 6 செண்டு 36 ல் ரோட்டுக்கு தென்புறம், ஏக்கர் 2 செண்டு 37 ல் வடபுறமும் , தென்புறமுமாக ஏக்கர் 1 செண்டு 27 ல் ரோட்டுக்கு தென்புறம் வடக்கே இருந்து 3 வது பாகம் செண்டு 27 பூராவும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரோட்டிற்கு தெற்கு புறம் உள்ள சொத்தானது 3 பங்காக வைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். ஆனால் அளந்து கூட தரவில்லை என்று சாட்சி பதிலளிக்கிறார்.

6) சுயம்பு நாடாருக்கு பாத்தியப்பட்ட 62 2/3 ல் நீங்கள் கிரையம் பெற்ற செண்டு 27 நீக்கி மீதமுள்ள 35 2/3 செண்டு சொத்தானது ரோட்டிற்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரியல்ல. நான் சுயம்பு நாடாரிடமிருந்து மீதமுள்ள 35 2/3 செண்டு சொத்தினை கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ- 8 ஆவணத்தில் கிழக்கு பக்கம் பாதை நிலமென குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அது ஆபிரகாம் நாடாருக்கு உள்ள இடத்திற்குரிய பாதையாகும். நீங்கள் கிரையம் பெற்ற செண்டு 27 நீக்கி மீதமுள்ள 35 2/3 செண்டு சொத்தானது புல எண். 498 ல் அமைந்துள்ள கிணற்றினை ஒற்றி அமைந்துள்ளது என்றால் சரியல்ல.

7) கிணற்றை ஒட்டி உள்ளதால் தான் மேற்படி ஆவணத்தில் சுயம்பு நாடார் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தினை அனுபவிக்கும் விதமாக பாதை ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. யாருக்கும் பாதை கிடையாது, அடுத்தவருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சாட்சி பதிலளிக்கிறார். பி.வா.சா.ஆ. 8 ஆவணத்தில் கிழக்கு பக்கம் பாதை என்று குறிப்பிட்டுள்ள நிலையில் எல்கை

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.07 18:17:11 +0530

விவரத்தினை பொறுத்து பி.வா.சா.ஆ. 8 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் என்றால் சரியல்ல. சுயம்பு நாடாருக்கு நெய்யாற்றங்கரையில் எந்த விதமான சொத்துக்களும் கிடையாது என்றால் சரிதான். சுயம்பு நாடாருக்கு நெய்யாற்றங்கரையில் எந்த விதமான சொத்துக்களும் கிடையாது என்ற நிலையில் நீங்கள் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ. 8 ஆவணம் செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

8) நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் சுயம்பு நாடார் அவரது மகள் சிவகாமி என்பவருக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சொத்து விவரத்தில் புல எண்.496/1 ஹெக் 0.10.50 க்கு சமமான செண்டு 26 ல் கிழக்கடைய கீழ்க்கண்ட எல்கைக்குட்பட்ட செண்டு 6.50 கட்டிடம் இல்லாத காலி மனை பூராவும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் வடக்கு பக்கம் எல்கையாக - கிழமேல் ரோடு, கிழக்கு - தென்வடல் இடுவை, தெற்கு - ஆபிரகாம் தோட்டம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 2 ஆவணம் சுயம்பு நாடார் அவரது மகன் கணேசன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த என்றால் சரியல்ல.

9) உங்களால் குறியீடு செய்யப்பட்ட பி.வா.சா.ஆ .2 ஆவணத்தில் வடக்கு எல்கையாக – கிழமேல் ரோடும், தெற்கு பக்க எல்கையாக ஆபிரகாம் தோட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 சுயம்பு நாடார் அவரது மகள் பொன்னு என்பவருக்கு எழுதிக் கொடுத்த செட்டில் மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அதில் வடக்கு எல்கையாக – கிழமேல் ரோடும், தெற்கு பக்க எல்கையாக ஆபிரகாம் தோட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.-4 ஆவணம் சுயம்பு நாடார் அவரது மகன் காந்தி என்பவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள செட்டில் மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்திலும் வடக்கு எல்கையாக – கிழமேல் ரோடும், தெற்கு பக்க எல்கையாக ஆபிரகாம் தோட்டமும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.07 18:17:15 +0530

10) சுயம்பு நாடாருக்கு பாத்தியப்பட்ட மீதமுள்ள 35 2/3 சொத்தானது ரோட்டிற்கு தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் சுயம்பு நாடாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவம் செய்யவிடாமல் இடையூறு செய்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் இடையூறு செய்வதாக குறிப்பிட்டு வாதி 2018 ம் ஆண்டு பழவூர் காவல் நிலையத்தில் ஒரு புகார் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 7 ஆவணத்தில் குறிப்பிட்டபடி சர்வே எண். 496 ஏக்கர் 2.37 ல் தெற்கடைய கிழமேலாக செண்டு 50 என்ற ஒரு சொத்து ஸ்தலத்தில் கிடையாது என்றால் சரியல்ல. பொன்னம்மை நாடாத்தி குமாரர்கள் ஒவ்வொருவருக்கும் 62 1/3 செண்டு மட்டுமே பாத்தியம் என்றும், அதனை விட நீங்கள் அதிகப்படியாக எழுதி வாங்கியிருப்பதால் பி.வா.சா.ஆ. 7 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

11) நீங்கள் கூறுவது போல் ரோட்டிற்கு வடபுறம் சுயம்பு நாடாருக்கு எந்த வித சொத்தும் கிடையாது என்றும், ரோட்டுக்கு தென்புறம் தான் சொத்துக்கள் உள்ளது என்றால் சுயம்பு நாடார் பி.வா..சா.ஆ. 3 முதல் 6 வரையிலான ஆவணங்களை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. சுயம்பு நாடாருக்கு ரோட்டிற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்தை மோசடியாக எழுதி வாங்கியிருக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதிக்கு அனுபவத்தை பொறுத்து உரிமை உள்ளது என்றால் சரியல்ல. தாவா வழக்கில் சாட்சி விசாரணை ஆரம்பிக்கப்பட்ட சமயத்தில் வாதியை மிரட்ட வேண்டும் என்பதற்காக வாதி மீது பழவூர் காவல் நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

ANNALAKSHMI Digitally signed by ANNALAKSHMI Date: 2026.07.07 18:17:19 +0530

12) எனது வழக்குரையில் ஏற்கனவே சுயம்பு நாடார் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில், அவ்வழக்கு தொடர்பான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கம் பாதையும், தெற்கு பக்கம் ஆபிரகாம் நாடார் நிலமும் என சுயம்பு நாடாரால் ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ. 3 முதல் 6 வரையிலான ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ. 1 பட்டாவானது புல எண். 496 7 க்கு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 6 ஆவணம் சுயம்பு நாடார், பண்டார நாடார் , பொன்னு , காந்தி , சிவகாமி, கணேசன் என்பவர்கள் பெயருக்கு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

13) பி.வா.சா.ஆ. 6 ஆவணத்தில் புல எண். 496/1 மற்றும் 498 / 1 B குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிணறு புல எண். 498 / 1 B ல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி புல எண். 498 / 1 B அமைந்துள்ள கிணற்றில் சுயம்பு நாடார் மற்றும் அவரது குமாரர், குமாரத்திகளுக்கு பங்கு இருப்பதால் தான் பி.வா.சா.ஆ. 6 பட்டாவில் உரிமையாளர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர் என்றால் சரியல்ல. உங்கள் பெயருக்கு ஏற்பட்ட கிரைய ஆவணங்கள் செல்லத்தக்க ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல.

ANNALAKSHMI
Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.07 18:17:22 +0530

14) உங்கள் பெயருக்கு ஏற்பட்ட மோசடியான ஆவணங்களின் அடிப்படையில் வாதிக்கு பாத்தியப்பட்ட பிராது 2 வது தபசில் சொத்தினை அனுபவம் செய்யமுடியாதபடி இடையூறு செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் சுயம்பு நாடாருக்கு தெற்கு பக்கம் புல எண். 496/1 ல் உள்ள உரிமையினை மறைத்து வடக்கு பக்கம் உள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அது போல் ரோட்டிற்கு வடக்கு பக்கம் சுயம்பு நாடாருக்கு எந்த வித சொத்தும் கிடையாது என்றால் சரியல்ல. வடக்கு பக்கம் சுயம்பு நாடாருக்கு 50 செண்டு சொத்து உள்ளது, அதில் 15 செண்டு சொத்து எனக்கு வர வேண்டும் என சாட்சி கூறுகிறார். மேற்படி 15 செண்டை கேட்டு நீங்கள் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்க கேட்டு சரியென்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

ANNALAKSHMI

Digitally signed by ANNALAKSHMI
Date: 2026.07.07 18:17:27 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வள்ளியூர்.